©
GOVERNMENT OF TAMIL NADU
2016

**[Regd. No. TN/CCN/467/2012-14.**
**[R. Dis. No. 197/2009.**
**[Price: Rs. 1.60 Paise.**

# TAMIL NADU GOVERNMENT GAZETTE

**EXTRAORDINARY** PUBLISHED BY AUTHORITY

No. 174] CHENNAI, MONDAY, JULY 25, 2016
Aadi 10, Thunmugi, Thiruvalluvar Aandu–2047

# Part III—Section 1(a)

**General Statutory Rules, Notifications, Orders, Regulations, etc., issued by Secretariat Departments.**

## NOTIFICATIONS BY GOVERNMENT

### RURAL DEVELOPMENT AND PANCHAYAT RAJ DEPARTMENT

AMENDMENTS TO THE TAMIL NADU PANCHAYATS (RESERVATION OF SEATS AND ROTATION OF RESERVED SEATS) RULES.

*[G.O. Ms. No. 87, Rural Development and Panchayat Raj (PR-1), 25th July 2016.]*

**No. SRO A-13(b-1)/2016.**

In exercise of the powers conferred by sub-section (1) of Section 242 read with Sections 11, 20, 32 and 57 of the Tamil Nadu Panchayats Act, 1994 (Tamil Nadu Act 21 of 1994), the Governor of Tamil Nadu hereby makes the following amendments to the Tamil Nadu Panchayats (Reservation of Seats and Rotation of Reserved Seats) Rules, 1995:-

AMENDMENTS

In the said Rules, in rule 7, in sub-rule (2),-

(1) in clause (a),-

(*a*) for the expression "Scheduled Castes and Scheduled Tribes in the Wards", the expression "Scheduled Castes and Scheduled Tribes and Women in the Wards" shall be substituted; and

(*b*) after the expression "relevant figures have been published", the expression "or for women" shall be inserted;

(2) in Explanation 1 to clause (a),-

(*a*) after the expression "relevant figures have been published", the expression "or for women" shall be inserted;

(*b*) after the expression "the population of the Scheduled Castes and Scheduled Tribes", the expression "or women" shall be inserted; and

(*c*) after the expression "percentage of Scheduled Castes and Scheduled Tribes", the expression "or of women" shall be inserted.

**அறிவிக்கை**

*[அரசாணை (நிலை) எண் 87, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (ஊ.1)த் துறை, 25 ஜூலை 2016.]*

**1994**–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் (தமிழ்நாடு சட்டம் **21/1994**)–இன் **242**–ஆம் பிரிவைச் சேர்ந்த **(1)**–ஆம் உட்பிரிவிலும், **11, 20, 32** மற்றும் **57** ஆகிய பிரிவுகளிலும் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, மேதகு தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் ஈங்கிதனால் தமிழ்நாடு ஊராட்சிகள் (இட ஒதுக்கீடு மற்றும் சுழற்சி முறை இட ஒதுக்கீடு) விதிகள், **1995**–ற்கு பின்வரும் திருத்தங்களை செய்கிறார்:–

**திருத்தங்கள்**

மேற்சொன்ன விதிகளில், 7–ஆம் விதியின் **(2)**–ஆம் துணை விதியில்,–

**(1)** பகுதி (அ) இல்,–

i. ''வார்டுகளில் உள்ள பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர்'' என்ற சொற்றொடருக்குப் பதிலாக ''வார்டுகளில் உள்ள பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர் மற்றும் மகளிர்'' என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்; மற்றும்

ii. ''தொடர்புடைய எண்ணிக்கை வெளியிடப்பட்டுள்ளன'' என்ற சொற்றொடருக்குப் பின்னர் ''அல்லது மகளிருக்காக'' என்ற சொற்றொடர் சேர்த்துக்கொள்ளப்படுதல் வேண்டும்;

**(2)** பகுதி (அ)–க்கான விளக்கம் **1** இல்,–

i. ''தொடர்புடைய எண்ணிக்கை வெளியிடப்பட்டுள்ளன'' என்ற சொற்றொடருக்குப் பின்னர் ''அல்லது மகளிருக்காக'' என்ற சொற்றொடர் சேர்த்துக்கொள்ளப்படுதல் வேண்டும்;

ii. ''பட்டியல் சாதி மற்றும் பழங்குடியின மக்கள் தொகை'' என்ற சொற்றொடருக்குப் பின்னர் ''அல்லது மகளிர்'' என்ற சொற்றொடர் சேர்த்துக்கொள்ளப்படுதல் வேண்டும்; மற்றும்

iii. ''பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினரின் விழுக்காடு'' என்ற சொற்றொடருக்குப் பின்னர் ''அல்லது மகளிரின்'' என்ற சொற்றொடர் சேர்த்துக்கொள்ளப்படுதல் வேண்டும்.

**ஹன்ஸ் ராஜ் வர்மா,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

AMENDMENTS TO THE TAMIL NADU PANCHAYATS (ELECTION) RULES.

*[G.O. Ms. No. 88, Rural Development and Panchayat Raj (PR-1), 25th July 2016.]*

**No. SRO A-13(b-2)/2016.**

In exercise of the powers conferred by Section 242 read with Sections 11, 20, 32 and 57 of the Tamil Nadu Panchayats Act, 1994 (Tamil Nadu Act 21 of 1994), the Governor of Tamil Nadu hereby makes the following amendments to the Tamil Nadu Panchayats (Election) Rules, 1995:-

AMENDMENTS

In the said Rules.-

(1) in rule 24, in sub-rule (2),-

(i) in clause (ii), for the expression "11-00 a.m. and 3-00 p.m.", the expression "10-00 a.m. and 5-00 p.m." shall be substituted;

(ii) in clause (iii), for the expression "11-00 a.m.", the expression "10-00 a.m." shall be substituted;

(2) in rule 29, in the proviso to sub-rule (7), for the expression "11-00 a.m.", the expression "10-00 a.m." shall be substituted;

(3) in rule 36, in clause (a), for the expression “11-00 a.m.”, the expression “10-00 a.m.” shall be substituted;

(4) in Form 2A, in clause (2), for the expression “11-00 a.m. and 3-00 p.m.”, the expression “10-00 a.m. and 5-00 p.m.” shall be substituted;

(5) in Form 2B, in clause (2), for the expression “11-00 a.m. and 3-00 p.m.”, the expression “10-00 a.m. and 5-00 p.m.” shall be substituted;

(6) in Form 3, under the heading “Receipt for nomination paper and notice of scrutiny”, for the expression “11-00 a.m.”, the expression “10-00 a.m.” shall be substituted; and

(7) in Form 5, for the expression “11-00 a.m.”, the expression “10-00 a.m.” shall be substituted.

## அறிவிக்கை

*[அரசாணை (நிலை) எண் 88, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (ஊ.1)த்துறை, 25 ஜூலை 2016.]*

1994–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 21/1994)–இன் 242–ஆம் பிரிவு மற்றும் 11, 20, 32 மற்றும் 57–ஆம் பிரிவுகளில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, மேதகு தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் ஈங்கிதனால் தமிழ்நாடு ஊராட்சிகள் (தேர்தல்) விதிகள், 1995–ற்கு பின்வரும் திருத்தங்களை செய்கிறார்:–

### திருத்தங்கள்

மேற்சொன்ன விதிகளில்,–

(1) 24–ஆம் விதியைச் சேர்ந்த (2)–ஆம் துணை விதியில்,—

i. பகுதி (ii)–இல், ‘‘முற்பகல் 11–00 மற்றும் பிற்பகல் 3–00’’ என்ற சொற்றொடருக்குப் பதிலாக ‘‘முற்பகல் 10–00 மற்றும் பிற்பகல் 5–00’’ என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்;

ii. பகுதி (iii)–இல், ‘‘முற்பகல் 11–00’’ என்ற சொற்றொடருக்குப் பதிலாக ‘‘முற்பகல் 10–00’’ என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்;

(2) 29–ஆம் விதியைச் சேர்ந்த பகுதி (7)–ஆம் துணை விதியின் காப்புரையில், ‘‘முற்பகல் 11–00’’ என்ற சொற்றொடருக்குப் பதிலாக ‘‘முற்பகல் 10–00’’ என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்;

(3) 36–ஆம் விதியைச் சேர்ந்த பகுதி (அ)–இல், ‘‘முற்பகல் 11–00’’ என்ற சொற்றொடருக்குப் பதிலாக ‘‘முற்பகல் 10–00’’ என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்;

(4) படிவம் 2 (அ)–வைச் சேர்ந்த, பகுதி (2)–இல், ‘‘முற்பகல் 11–00 மற்றும் பிற்பகல் 3–00’’ என்ற சொற்றொடருக்குப் பதிலாக, ‘‘முற்பகல் 10–00 மற்றும் பிற்பகல் 5–00’’ என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்;

(5) படிவம் 2 (ஆ)–வைச் சேர்ந்த, பகுதி (2)–இல், ‘‘முற்பகல் 11–00 மற்றும் பிற்பகல் 3–00’’ என்ற சொற்றொடருக்குப் பதிலாக, ‘‘முற்பகல் 10–00 மற்றும் பிற்பகல் 5–00’’ என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்;

(6) படிவம் 3–இல் வேட்பு மனுக்கான பற்றுச்சீட்டு மற்றும் கூர்ந்தாய்வுக்கான அறிவிப்பு என்ற தலைப்பின் கீழ் உள்ள ‘‘முற்பகல் 11–00’’ என்ற சொற்றொடருக்குப் பதிலாக, ‘‘முற்பகல் 10–00’’ என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்;

(7) படிவம் 5–இல் ‘‘முற்பகல் 11–00’’ என்ற சொற்றொடருக்குப் பதிலாக, ‘‘முற்பகல் 10–00’’ என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்.

**ஹன்ஸ் ராஜ் வர்மா,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

PRINTED AND PUBLISHED BY THE DIRECTOR OF STATIONERY AND PRINTING, CHENNAI
ON BEHALF OF THE GOVERNMENT OF TAMIL NADU